2015 செப்டம்பர் 25]

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாச்சலூர் மலைப் பகுதியில் தனியாரது பட்டா நிலங்களில் கட்டப்பட்டுள்ள தடுப்பணைகள், மேற்கு தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், மண் அரிப்பைத் தடுக்கும் பணியின்கீழ் தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் துறைமூலம் கட்டப்பட்டவையாகும். வேளாண்மைப் பொறியியல் துறை மற்றும் வருவாய்த் துறையினர் இணைந்து ஆய்வுகள் மேற்கொண்டு, பொதுப் பணித் துறையின் ஓடைகளுக்குக் குறுக்கே அனுமதியில்லாமல் கட்டப்பட்டுள்ள தடுப்பணைகள் ஏதேனும் கண்டறியப்பட்டால் அவற்றை மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லரசு அகற்ற உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(ஆ) கரும்பு விவசாயிகளுக்கு பாக்கித் தொகை வழங்கப்படாமை—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ஆறுமுகம், என்ன சொல்லுங்கள்.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எல்லோரும் எழுந்து நின்று கேட்டால் எப்படி? ஒரு கட்சியிலே உள்ள 10 பேரும் எழுந்து நின்று கேட்டால் எப்படி?*

திரு. எம். ஆறுமுகம்: *தமிழகத்தில் இருக்கும் கரும்பு விவசாயிகளுக்கு 800 கோடி ரூபாய் பாக்கி தராமல் வைத்துக்கொண்டிருப்பது சம்பந்தமாக கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கவன ஈர்ப்பு என்பது யாராவது ஒருவர்தான் பேச முடியும். ஒரே கட்சியில் 10 பேர் கை தூக்கினால் நான் எப்படி அனுமதிக்க முடியும்?*

திரு. எம். ஆறுமுகம்: *அதை எடுத்து விவாதிப்பதற்கும், விவசாயிகளுக்கு பாக்கிப் பணம் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.*